(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 87.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2023 நவம்பர் 29, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

3483/2023

கௌரவ வேலு குமார்,— அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு உரித்தான தோட்டக் காணிகளில் பாற்பண்ணைகளை நிறுவுவதற்கு 2021.09.06 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஆமெனில், இதற்கென “கலபொட” மற்றும் “மவுண்ட் ஜீன்” ஆகிய ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளப்படும் காணிகளின் அளவு ஏக்கர்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இக் காணிகளைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு கம்பெனியினதும் பெயர், அக்கம்பெனிகளின் பணிபாளர்களின் பெயர்கள், அவர்களின் தேசியம் (உள்நாட்டவரா/வெளிநாட்டவரா) என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கம்பெனியினால் செலுத்தப்படும் முற்பணத் தொகை மற்றும் ஒரு ஏக்கருக்கான வருடாந்த குத்தகைத் தொகை என்பன வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி தோட்டங்களில் பாற்பண்ணைக்காக ஒதுக்கப்படும் நிலப்பரப்பில் அமைந்துள்ள லயன் வீடுகளினதும் வணக்கஸ்தலங்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்,

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்படி தோட்டங்கள் அமைந்துள்ள மாவட்டங்களில் உள்ள அரச பாற்பண்ணைகளிடம் போதியளவு காணிகள் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி தோட்டக் காணிகளை பாற்பண்ணைகளுக்காக வழங்கப்பட்டதன் அடிப்படை யாதென்பதையும்;

(iii) அப் பாற்பண்ணைகளை நிறுவுவதற்காக சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

அவர் மேலும் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

3648/2023

கௌரவ வடிவேல் சுரேஷ்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்துக்களின் சமய அலுவல்களின் நிமித்தம் பதுளை மாவட்டத்தில் தோட்டங்களையும் நகரங்களையும் அண்டியதாக கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) தோட்டத் தொழிலாளர்களின் மாதச் சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்ற சந்தா மற்றும் மக்கள் பிரதிநிதிகளால் வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாடுகளைக் கொண்டு தோட்டப்புற கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) நிதி நெருக்கடிகள் காரணமாக தோட்டப் புறங்களில் அமைக்கப்பட்டுள்ள கோவில்களில் பெரும்பாலானவை பகுதியளவிலேயே அமைக்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பதுளை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கோவில்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) தோட்டப் புறங்களில் அமைக்கப்பட்டுள்ள கோவில்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அத்தகைய கோவில்களை அபிவிருத்தி செய்வதற்கு/ பாதுகாப்பதற்கு எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

3664/2023

கௌரவ லலித் எல்லாவல,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்தல, ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக வெளிநாட்டு நன்கொடைகள் கிடைக்கப்பெற்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு நன்கொடையின் பெறுமதி தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டுள்ள அரசாங்க நிதியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி நிதி பெறப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி விமான நிலையத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி தொடக்கம் இது வரையில் அதன் வருமானம் மற்றும் செலவினம் ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக கேள்வி மனுக்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(ii) இல்லையெனில், விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக குறித்த கட்டுமான நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iii) மேற்படி விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகள் வெளிநாட்டு நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டிருப்பின், அதன் இலங்கை முகவர் யார் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

3708/2023

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில்;

(ii) அவற்றில் அரசியல்வாதிகளுக்கும் அரச அலுவலர்களுக்கும் எதிராக உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை;

(iii) மேலே (i)இல் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்பாடுகளில் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில்;

(iv) ஆரம்பப் புலனாய்வின் பின்னர் அல்லது நீதிமன்ற விசாரணையின் போது ஆணைக்குழுவினால் வாபஸ் பெறப்பட்ட முறைப்பாடுகள் /வழக்குகளின் எண்ணிக்கை;

(v) மேற்படி ஒவ்வொரு முறைப்பாடு /வழக்கின் பிரதிவாதிகளின் பெயர்கள்;

தனித்தனியே யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட முறைப்பாடுகளில் நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மற்றும் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள்/வழக்குகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில்;

(ii) நிராகரிக்கப்பட்ட ஒவ்வொரு முறைப்பாடு/வழக்கின் பிரதிவாதிகளின் பெயர்கள்;

(iii) குற்றவாளியாக்கப்பட்ட ஆட்களிடமிருந்து அறவிட்டுக்கொள்ளப்பட்ட தண்டப்பணம் ஒவ்வொரு வருட அடிப்படையில்;

தனித்தனியே யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

3719/2023

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையின் எழுத்தறிவு விகிதம் யாதென்பதையும்;

(ii) வருடாந்தம் பாடசாலையை விட்டு இடை விலகும் மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு தரத்திற்கமைவாகவும் தனித்தனியே எத்தனையென்பதையும்;

(iii) பாடசாலையை விட்டு இடை விலகும் மாணவர்களுக்காக உள்ள தொழிற்பயிற்சிக் கற்கை நெறிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை மேற்படி தொழிற்பயிற்சிக் கற்கை நெறிகளின் கீழ் பயிற்சி பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கமைவாகவும் தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் இலங்கையிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றுள் தற்போது செயற்பாட்டிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இன்றளவில் தொழில்நுட்பக் கல்லூரிகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— அற்றோணித் தத்துவம் (திருத்தம்),— (122 ஆம் அத்தியாயமான) அற்றோணித் தத்துவக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீடு சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட பதினான்காம் நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, நவம்பர் 28)

*2.

கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்,— 1990 சுவசெரிய அறக்கட்டளையின் வருடாந்த அறிக்கை (2022),— 2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சுவசெரிய அறக்கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் பிரிவின் கீழ் 2023.09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய 1990 சுவசெரிய அறக்கட்டளையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.10.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.10.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*3.

கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்,— விஜய குமாரதுங்க நினைவு மருத்துவமனையின் வருடாந்த அறிக்கை (2021),— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் 2023.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய விஜய குமாரதுங்க நினைவு மருத்துவமனையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.07.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*4.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2023.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நியாயமான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.07.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*5.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— புத்தசாசன நிதியத்தின் வருடாந்த அறிக்கைகள் (2016 மற்றும் 2017),— 1990 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, புத்தசாசன நிதியச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016.12.31 மற்றும் 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய புத்தசாசன நிதியத்தின் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.05.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*6.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர், — வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை (2022),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ் 2023.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.09.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.09.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*7.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*8.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*9.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை பத்திரிகைப் பேரவையின் வருடாந்த அறிக்கையும் கணக்குக் கூற்றும் (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை பத்திரிகைப் பேரவையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையும் கணக்குக் கூற்றும் அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*10.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவையின் அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*11.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை அச்சக நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அச்சக நிறுவகத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*12.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2022.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*13.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— தி அஸோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2022.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தி அஸோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்டின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*14.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2022.11.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*15.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை மன்றத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.07.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 202 1.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மன்றத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.10.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.10.18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*16.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— தி அஸோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தி அஸோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்டின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.10.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.10.18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*17.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.10.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.10.18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*18.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*19.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*20.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*21.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2017),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*22.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை அச்சக நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 201 6.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அச்சக நிறுவனத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*23.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை அச்சக நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2017),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அச்சக நிறுவனத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*24.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை அச்சக நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2018),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அச்சக நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*25.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை அச்சக நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அச்சக நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*26.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை அச்சக நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அச்சக நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*27.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1930 ஆம் ஆண்டின் (கடந்த ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட 2003 ஆம் ஆண்டின்) 10 ஆம் இலக்க, இறப்பர் ஆராய்ச்சி ஆணைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் 2023.05.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.08.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.08.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*28.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2023.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.08.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.08.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*29.

கடற்றொழில் அமைச்சர்,— இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2020),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் 2023.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.07.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.08.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*30.

வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2020),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 166 ஆம் பிரிவின் கீழ் 2023.02.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய மத்திய பொறியியல் சேவைகள் தனியார் நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நீர்ப்பாசன அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.04.25 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*31.

வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(I) ஆம் பிரிவின் கீழ் 2022.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மகாவலி அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நீர்ப்பாசன அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.04.25 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*32.

நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2023 நவம்பர் 08) [1].

*33.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*34.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*35.

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*36.

நிதிச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*37.

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*38.

தேசிய நீரளவை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*39.

மத்தியஸ்தத்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்றங்கீகரித்தலும் மற்றும் வலுவுறுத்தலும் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*40.

மத்தியஸ்த சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*41.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*42.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*43.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*44.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*45.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை உள்ளடக்கிய, 2022 மே 27 ஆம் திகதிய 2281/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை இரத்துச் செய்து 2022 செப்டெம்பர் 08 ஆம் திகதிய 2296/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*46.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 நவம்பர் 05 ஆம் திகதிய 2304/88 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*47.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 டிசம்பர் 14 ஆம் திகதிய 2310/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*48.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 18 மற்றும் 19 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 டிசம்பர் 14 ஆம் திகதிய 2310/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*49.

வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரச் சபைச் சட்டத்தின் 54(1) மற்றும் 54(2) ஆம் பிரிவுகளுடன் கீழ் நீர்ப்பாசன அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய 2345/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*50.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 13(1)(அ) மற்றும் 13(1)(ஆ) ஆம் பிரிவுகளின் கீழ் ஆய வரி தொடர்பில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 யூலை 04 ஆம் திகதிய 2339/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*51.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 26 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 2345/74 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*52.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் ஊதியத்தினை தீர்மானித்தல்,— 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் ஊதியமானது, அச் சட்டத்தின் 9 ஆம் மற்றும் 24 ஆம் பிரிவுகளுக்கு அமைய பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் அது திரண்ட நிதியத்தினால் செலுத்தப்படுதலும் வேண்டுமென்பதாலும்;

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அங்கத்தவர்களாக மூன்று பேர் நியமிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு நியமிக்கப்படும் நபர்கள் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் அங்கத்தவராக பதவி வகிப்பதற்கு முன்னர் அவர்களினால் ஊதியம் பெறும் அனைத்துப் பதவிகளையும் கைவிட வேண்டியதுடன், ஆணைக்குழுவின் அங்கத்தவராக இருக்கும் வேளையில் ஏதேனும் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுதல், ஏதேனும் தொழில் துறையில் ஈடுபடுதல் கூடாது என்பதாலும்;

சட்டத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்படுபவர் அரச சேவையின் அனுவதித்தல் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர் அல்லாது இருப்பின் அவர் பணிப்பாளர் நாயகப் பதவியினை பொறுப்பேற்பதற்கு முன்னர் அனைத்து ஊதியம் பெறும் பதவிகளில் இருந்தும் விலக வேண்டுமென்பதாலும்;

இச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் விரிவடைவதனால் அவ் ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்புக்களும் அதிகரித்துள்ளன என்பதாலும்; அத்துடன்

அப் பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர் மேற்கூறப்பட்டவாறு வேறு ஊதியம் பெறும் பதவிகளில் இருந்து விலகுதல் மற்றும் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுதல் அல்லது ஏதேனும் தொழில் துறையில் ஈடுபடுதல் கூடாது என்பதனால் மற்றும் அவர்களினால் மேற்கொள்ளவுள்ள விசேட பணிகளை கருத்திற் கொண்டு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு, கீழே குறிப்பிடப்பட்டவாறு ஊதியம் செலுத்துவதற்கு අමප/23/2004/601/056 ஆம் இலக்க மற்றும் 2023 ஒக்டோபர் 23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது:—

(i) தலைவருக்கு ரூபா. 500,000.00 உம், அங்கத்தவருக்கு ரூபா. 450,000.00 உம் மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்கு ரூபா 400,000.00 என்ற அடிப்படையில் மாதாந்த ஊதியத்தினை செலுத்துதல்;

அரச ஊழியர் ஒருவர் அனுவதித்தல் அடிப்படையில் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்படும் பட்சத்தில், ரூபா 400,000.00 ஊதியம் அல்லது அவ்வாறு நியமிக்கப்படுபவர் அரச ஊழியராக இறுதியாகப் பெற்று வந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் (போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் சாதன கொடுப்பனவு தவிர) கூட்டுத் தொகைக்கு சமமான அடிப்படையில் ஊதியம் அல்லது இவை இரண்டில் பெறுமதி கூடிய ஊதியத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு உரிமை கிடைக்கின்றது.

(ii) தொடர்பாடல் சாதனக் கொடுப்பனவாக தலைவருக்கு ரூபா. 10,000.00 நிதியும், அங்கத்தவருக்கு ரூபா. 7,500.00 வீதம் மற்றும் பணிப்பாளர் நாயத்திற்கு ரூபா. 7,500.00 வீதம் செலுத்துதல்.

(iii) போக்குவரத்துக் கொடுப்பனவு கீழ் குறிப்பிடப்பட்டவாறு செலுத்துதல்.

| | **எரிபொருள் கொடுப்பனவு** | **போக்குவரத்து கொடுப்பனவு **** | **சாரதிக் கொடுப்பனவு **** |
|---|---|---|---|
| தலைவர் | 225 லீற்றர் | ரூபா. 50,000.00 | ரூபா. 25,000.00 |
| அங்கத்தவர்கள் | 200 லீற்றர் | ரூபா. 50,000.00 | ரூபா. 25,000.00 |
| பணிப்பாளர் நாயகம் | 200 லீற்றர் | ரூபா. 50,000.00 | ரூபா. 25,000.00 |

** அரசாங்கத்தினால் சாரதியுடன் உத்தியோகபூர்வ வாகனத்தினை வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் சாரதிக் கொடுப்பனவினை பெற்றுக் கொள்ள உரிமை கிடைக்கின்றது.

இதற்கமைய, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 9 ஆம் மற்றும் 24 ஆம் பிரிவுகளின் பிரகாரம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு மேற்குறிப்பிடப்பட்டவாறு ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*53.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 09 ஆம் திகதிய 2353/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*54.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*55.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

56.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

59.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

60.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

61\.
சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

62\.
அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

63\.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

64\.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

65\.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

66\.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

67\.
திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

68\.
திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

69\.
தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

70\.
இலங்கை பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

71\.
தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

72\.
தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

73\.
சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

74\.
இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கைநெறி திறந்த நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.
"ஒதுக்கீடு" எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---